செ. கு. எண்: 196 நாள்: 04.12.2017

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி**
அவர்களின் அறிக்கை – 4.12.2017

**1.** தேனி மாவட்டம், பெரியாறு பாசனப் பகுதியில் உள்ள ஒரு போக பாசன நிலங்களுக்கும், திருமங்கலம் பிரதான கால்வாயின் ஒரு போக பாசன நிலங்களுக்கும் தண்ணீர் திறந்துவிடுமாறு வேளாண் பெருமக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, தேனி மாவட்டம், பெரியாறு பாசனப் பகுதியில் உள்ள ஒரு போக பாசன நிலங்களுக்கும், திருமங்கலம் பிரதானக் கால்வாயின் கீழ் உள்ள ஒரு போக பாசன நிலங்களுக்கும் **வைகை அணையிலிருந்து** வினாடிக்கு 900 கன அடி வீதம் **5.12.2017 முதல்** தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், திண்டுக்கல், மதுரை மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் உள்ள **1,05,002 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும்.

**2.** தேனி மாவட்டம், 18ம் கால்வாயின் (பழனிவேல் ராஜன் கால்வாய்) கீழ் உள்ள ஒரு போக பாசன நிலங்களுக்கு தண்ணீர் திறந்துவிடும்படி வேளாண் பெருமக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, தேனி மாவட்டம்,
18ம் கால்வாயின்கீழ் உள்ள ஒரு போக பாசன நிலங்களுக்கு **பெரியாறு அணையிலிருந்து** வினாடிக்கு 279 கன அடி வீதம் **5.12.2017 முதல்** தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், தேனி மாவட்டம் உத்தமபாளையம் மற்றும் தேனி வட்டங்களில் உள்ள **4,614.25 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும்.

**3.** இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் உள்ள பெருங்குடி மக்களின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்ய தண்ணீர் திறந்துவிடும்படி எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. பெருங்குடி மக்களின் வேண்டுகோளினை ஏற்று, இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் உள்ள வைகை பூர்வீக பாசன பகுதி 3 மற்றும் 2–க்கு குடிதண்ணீருக்காக வைகை அணையிலிருந்து முறையே **1,071.36 மி.க.அடி** மற்றும் **457.92 மி.க.அடி** தண்ணீரை வைகை ஆற்றுப் படுகையை நனைக்கும் வகையில் **வைகை அணையிலிருந்து 5.12.2017 முதல்** தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன் என்பதையும் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், விவசாயப் பெருமக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர் மகசூல் பெற வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**